4th August 1966]

புலவர் கா. கோவிந்தன் : சிறுவர் கலைக் களஞ்சியம் தொகுத்து வெளியிடுகின்ற அந்தக் குழுவில் யார் யார் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் வளர்ச்சிக் கழகம் தான் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே யார் யார் இந்தப் பணியைக் கவனித்து வருகிறார்கள் என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

கோயில் அர்ச்சகர்களுக்குச் சம்பள உயர்வு.

* 64 கேள்வி—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள பல பெரிய தேவாலய அர்ச்சகர்கள், ஊழியர்கள் தங்களுக்கு சம்பள உயர்வு கோரி சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டும் முறையிட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The South Indian Archakas Association, Madras in its 16th Annual Conference held in November 1964 at Madras passed a resolution that the Dittams in the temples are too low to meet the necessities of the poojas in the temples, that they may be enhanced, and that the previleges shown on Non-Gazetted Officers may be granted to the Archakas also;

(*b*) The Commissioner, Hindu Religious and Charitable Endowments has issued instructions to the Executive Authorities of Religious Institutions to revise the Dhittam regarding the payment of salaries of Archakas according to the cost of commodities and the income of the institutions.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பல தேவாலயங்களில் அர்ச்சகர்களுக்கு, முன்பிருந்த முறைப்படி, தானியங்களாகவே வழங்கக்கூடிய நிலை இருந்தது. இப்பொழுது ரேஷன் காரணமாக, வெளியிடங்களிலிருந்து நெல் முதலிய தானியங்கள் போவதற்கு சில சிரமங்கள் காரணமாகவும், நெல் முதலிய தானியங்களை அந்தந்த இடங்களில் கொள்முதல் செய்வதன் காரணமாகவும், அர்ச்சகர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகவும் குறைந்த அளவுக்கே இருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் இவ்வளவாவது வருமான அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்ற நியதியை வகுத்து, இந்து அற நிலைய போர்டாரிலிருந்து தாக்கீது கொடுக்க வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஊழியர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுவதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எவ்வளவு தூரம் அதைச் செய்ய முடியும் என்பது அந்தந்த ஸ்தாபனங்களின் வருவாயைப் பொருத்ததாக இருக்கிறது.

[4th August 1966

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : பெரிய தேவலாயங்களில் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய பாசுரங்கள் ஓதுகின்ற ஓதுவாமூர்த்திகளுக்குக் கொடுக்கின்ற சம்பளம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அதை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை காணுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் நேரடியாக வழிவகை காண முடியாது. ஆனால், அற நிலைய இலாக்காவினர் இதைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

ஸ்ரீரங்கம் தேவஸ்தானம்.

*** 65 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தில் சம்பிரதாயத்திற்கு விரோதமாக நிர்வாக அதிகாரியால் டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய விதிமுறைகள்.

*** 66 கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மக்கள் கிளர்ச்சி செய்யும்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதுபற்றிய விதி முறைகளை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. செ. மாதவன் : இந்த விதிமுறைகளை மாற்றுவதற்கு புதிய தொகுப்பு ஒன்றைச் சென்னையிலுள்ள கமிஷனர் வெளியிட்டது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? வெளியிடுவதற்கு முன்னால் அதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிஷனர் அவர்கள், தன்னுடைய அனுபவத்தையொட்டி, சொந்த அபிப்பிராயத்தைத் தான் தெரிவித்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய நிமித்தம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றபோது, முதல் தடவையாகப் பயமுறுத்துவதற்காகச் சுடப்படுகிற முறையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? அல்லது, எடுத்த எடுப்பிலேயே கொல்லுவதற்கு என்ற முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ?